RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22299

OPEN ACCESS

# ஆகாச வீடுகள் புதினத்தில் தலைமைக் கதை மாந்தர்களின் உளவியல்

ம. கீதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல்மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் - 641043, தமிழ்நாடு, இந்தியா.

# Akasa Veedu Novel from Psychological Perspective

M. Geetha [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home science and Higher Education for Women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author: geetha_tam@avinuty.ac.in

Received: 10-09-2022
Revised: 12-11-2022
Accepted: 19-11-2022
Published: 05-12-2022

**ABSTRACT**

Psychology is the explanation of the states and functions of the human soul. It is psychology that paves the way for the development and elevation of the inner life of man and is related to the subconscious mind of man and its functioning. Psychology is a study of human behavior in a scientific manner. It also sum totals the behavior and thoughts of an individual. And psychology deals with the mental activities of an individual. It has evolved and grown into many branches today. The main story of Akasa Veedu novel is explored in this article under the sub-topics of introduction, definition of psychology, literature and psychology, psychology of novelty, characters like Lalitha the peak of patience, Rukumani who speaks philosophy, Saroja the peak of poverty and ends with a conclusion.

**Keywords:** Psychology, Akasa Veedu, Rukumani, Human behavior

## முன்னுரை

ஆதிகால மனிதன் தன் உடலை அன்றி வேருன்றையும் அறிந்ததில்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல உடம்பில் உள்ளே உறுபொருள் ஒன்று உண்டு என உணர்ந்தான் மனிதர்களின் மன உணர்வை ஆராய்கின்ற தன்மையை உளவியல் எனலாம் உளவியல் அல்லது மனோ தத்துவம் என்பது மனிதனின் செயல்பாடுகள் மற்றும் நடத்தைகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் பயன்பாட்டு ஒழுங்கு முறையாகும் மேலை நாடுகளில் உளவியல் பற்றிய சிந்தனை மிக விரிவாக காணப்படுகிறது தமிழில் இன்னும் முழுமையாக வளர்ச்சி பெறாத ஒரு துறை உளவியல் எனலாம் உள்ளத்தின் கோலங்களையும் கோணங்களையும் அதன் விளைவுகளையும் ஆராய்கின்ற ஒரு அறிவியல் துறை என்றும் நடத்தை மற்றும் அனுபவத்தை அறிவியல் முறையில் ஆராய்வது என்றும் வரையறுப்பர் ஆகாச வீடுகள் புதினத்தில் தலைமை கதை மாந்தர்களின் பண்புகள் வலி உளவியலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## உளவியல்

உளவியல் என்பதனை முதன் முதலில் பிளாட்டோ எனும் கிரேக்க அறிஞர் தான் உருவாக்கினார். இவர் உயிரியல் உளவியல் என்பதை உருவாக்கினார். இவரைத் தொடர்ந்து இவரின் மாணவர் அரிஸ்டாட்டில் என்பவர் செயல்பாட்டு உளவியலை உருவாக்கினார். இதன் மூலம்

அரிஸ்டாட்டில் எழுதிய “ஆன்மாவின் இயல்புகள்” என்ற நூலே உளவியலில் வந்த முதல் நூலாகும். இதற்கு பின்னர் வெளிவந்துள்ள பல அறிஞர்களின் நூல்கள் “ஆன்மா” “உள்ளம்” ஆகியவை பற்றிய பல கருத்துக்களை கொண்டிருந்தன. உள்ளத்தில் அமைப்பு தொழில்கள் போன்றவை பற்றி ஓரளவு அறிவியல் முறைப்படி சிந்தித்து தம் கருத்துக்களை வெளியிட்டவர் தேகார்ட்டே என்னும் தத்துவ அறிஞர் ஆவார். அவருக்கு பின்னர் உளவியல் ஆராய்ச்சியிலும், வளர்ச்சியிலும் பல அறிஞர்கள் பங்கு கொள்ள தொடங்கினர். மன இயல்பு உள்ளம் பற்றிய அறிவியல் என பெருஞ்சொல்ல அகராதி உளவியலுக்கு விளக்கம் தருகிறது.

உளவியல் என்பதற்கு “ரகசியம்” “உட்காரியம்” “உட்கிடை” என்றும் “உளவுசொல்லல்” என்பதற்கு “உள்ளவைகளை அறிந்து சொல்லல்” என்றும் தமிழ் சொல் அகராதி பொருள் விளக்கம் தருகிறது.

எச்.சி.வாரன் என்னும் அறிஞர் உளவியல் என்பதை,

- உள்ள நிகழ்ச்சிகள் அல்லது உள்ளம் செயல்களை ஆராயும் அறிவியல் துறை.
- மனிதனுக்கும் சூழ்நிலைக்கும் இடையே ஏற்படும் பரஸ்பரம் தொடர்புகளை ஆராயும் அறிவியல் துறை
- மனிதனது நடத்தையை முறையாக ஆராயும் அறிவியல் துறை
- தனிமனிதனுடைய உள்ளம் பற்றிய அறிவியல் என்று பலவாறாக அறிவியல் முறையுடன் இணைத்து விளக்குகிறார்.

உள்ளத்தின் இயல்புகளையும் அவற்றின் செயல்பாடுகளையும் பகுத்து விளக்கும் அறிவியல் துறைக்கு 1960 ஆம் ஆண்டு வரையில் உளவியல் என்று அழைத்தனர். அதன் பிறகே முதன்மையும் தலைமையும் கருதி “நடத்தை பற்றிய அறிவியலே உளவியல்” என நடைமுறையில் வழங்கப்படுகின்றது.

## இலக்கியமும் உளவியலும்

இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு இரண்டுமே மனிதனுடைய அகநிலையை பற்றி கூறுவதாக அமைகின்றது.

மனித உள்ளத்தைப் பற்றிய ஆய்வில் இலக்கியமும் உளவியலும் வெவ்வேறு அணுகுமுறையைப் பின்பற்றிவருகின்றன எனினும் அவற்றின் கருவாக அமைவது மனித உள்ளமே ஆகும். இலக்கியத்தில் உளவியலைப் பொருத்திப் பார்ப்பதற்கு உரிய காரணங்களாகக் கீழ்க்கண்டவற்றை குறிப்பிடலாம்.

- படைப்பில் படைப்பாளியின் சுய வரலாற்றைக் காணுதல்
- இலக்கியத்தில் இடம்பெறும் மாந்தரின் உணர்ச்சி வெளிப்பாட்டினை விளக்குதல்.

## புதினம் காட்டும் உளவியல்

ஆகாச வீடுகள் என்னும் புதினம் உளவியல் தன்மையில் பார்க்க வேண்டிய புதினமாகும். ஒரு புதினத்திற்கு கரு இன்றியமையாதது. ஆயினும் அதற்கும் உயிர் தர வல்லது பாத்திரம் ஆகும். வாசகர் மனதில் ஊறும் உணர்ச்சி மிக்க வாழ்வு நிலை பெறுவது பாத்திரமே ஆகும். புதின ஆசிரியர் படிப்போர் உண்மை உலக மனிதரை காண்பது போலவே புதினத்தில் வரும் கதை மாந்தரையும் காணச் செய்கிறார். படைப்பாளர் தான் கடந்து வந்த பாதையில் கண்ட மனிதர்களைக் கொண்டு கதாபாத்திரங்களை படைக்கிறார். கதை மாந்தர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தனித்தன்மையோடும், செயல்பாட்டோடும் இயங்குவது இன்றியமையாதது.

வாஸந்தி தனது புதினத்தில் பெண் கதாபாத்திரங்களாக லலிதா, பாலா, மீனா, ருக்மணி, சரோஜா, லட்சுமி, மஞ்சு, நீலா, வனஜா, ஹரிஹரனின், போன்றவர்களை படைத்து காட்சிப்படுத்தியுள்ளார். இந்த புதினத்தில் முக்கியத்துவம் தரப்படுவது பெண்களுக்கு தான்.

நகரமாயினும் கிராமம் ஆயினும் பெண்களுக்கு மதிப்பில்லை மரியாதையில்லை பெண்கள் உரிமை கேள்விக்குறியாக நிற்கிறது அந்த வகையில் தலைமை கதாபாத்திரங்களான லலிதா ருக்மணி சரோஜா ஆகியோரின் உணர்ச்சி மற்றும் நடத்தை உளவியலை பற்றி இங்கு காணலாம்.

## பொறுமையின் சிகரம் லலிதா

ஆகாச வீடுகள் புதினத்தின் கதாநாயகியே லலிதா தான். ஆசிரியரின் கதை கருவை மெய்ப்பிக்க ஆசிரியராள் உருவாக்கப்பட்டவள். பிராமணத்துவம். ஒரு பெண் குடும்பத்தில் எப்படி இருக்க வேண்டுமோ அத்தகைய பண்புகள் அனைத்தும் நிறைந்தவள். காலையில் எழுந்து குளித்துவிட்டு அழகாக கோலம் போட்டு தன் கணவனுக்கு வேண்டிய உதவிகளை செய்து அனுப்பி விட்டு மகனை தயார் செய்து பள்ளிக்கு அனுப்பிவிட்டு வீட்டு வேலைகளை செய்து அக்கம் பக்கத்தாருக்கு உதவி செய்து எல்லோரையும் நேசித்து வாழ்கிற ஒரு வாழ்வு லலிதா உடையது.

லலிதாவின் கணவன் சபேசன் ஒரு நொந்து போன பிராமண சமூகத்தின் பிரதிநிதி. அவன் நாள்தோறும் காலையில் எழுகிறான் கடனே என்று பூஜை செய்கிறான். ஆனால் சொத்து சேர்ப்பதில் குறியாக இருக்கிறான். லலிதா போடும் கோலத்தை கூட ரசிக்க முடியாத மனஇறுக்கம் கொண்டவனாகவும் மனைவியோடு உடலுறவு கொள்ளும் போது கூட ஒரு வார்த்தை அவளோடு அன்பாக பேசாதவன் ஆகவும் மனைவியை குழந்தை ராஜுவை மிரட்டி மிரட்டியே வளர்ப்பவனாகவும் ஆசிரியர் காட்சிப்படுத்தியுள்ளார்.

லலிதா அன்பானவள். அவளின் கணவனான சபேசன் அவளின் அன்பை உணராதவன். அவளிடம் எப்பொழுதும் எரிந்த விழுகிறான் தன் பிள்ளையான ராஜிவை அடிக்கிறான் எதிலும் குறை கண்டுபிடித்து அவமானப்படுத்துகிறான். ஆனால் அவள் அதனை புன்முறுவலுடன் ஏற்றுக் கொள்கிறாள் அவன் என்னதான் கொடுமை படுத்தினாலும் அதனை தன் குறையாக ஏற்றுக் கொள்கிறாள். சிரித்துக் கொண்டே வேலை செய்கிறாள். எதற்கும் கண்கலங்குவதில்லை தனக்கு துன்பம் வரும்போது மனது அமைதி இல்லாத தவிக்கும் போது அவள் சிந்தனை வயப்பட்டு நிற்கிறாள்.

தன்னைச்சற்றி நடக்கிற கொடுமைகளுக்கும் தவறுகளுக்கும் யாரையும் பொறுப்பாளி ஆக்காத மனசு லலிதா உடையது. தவறுகளுக்கு காரணம் என்ன என்பதற்கு அவள் சொல் நான் லும் பதில் தத்துவார்த்தமாது. அவளின் வயதுக்கு மிஞ்சிய அறிவுபூர்வமானது. அவளின் தந்தை அவளுக்கு ஊட்டிய அறிவு அது. "நிச்சயமா இதை நம்புகிறேன், மீனு! உலகத்திலே நடக்கிற எந்த தப்பும் வேண்டும் என்று நடக்கிற தப்பில்ல தெரியாத்தனத்தினாலே அசட்டுத்தனத்தினாலே நடக்கிற தப்பு அது. அந்த அசட்டுத்தனத்தை எல்லாம் நாம பெருசா நினைத்துக்கொண்டு மனசுல நிறுத்தி வைத்துக்கொண்டால் அதைவிட அசட்டுத்தனம் வேறு எதுவுமே கிடையாது. மனச ஒருத்தருக்கு கொடுத்தா பிரியமா இருந்தா போலீசுக்கு அவசியமே இல்லை பிரியம் என்கிற பதத்தையே நாம் மறந்ததுட்டதாலே தான் எல்லா" இது லலிதாவின் கருத்து மட்டுமல்ல மிக உயர்ந்த சமுதாய கருத்தாகும் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார் (Vaasanthi, 1981).

லலிதா தன் பொறுமைக்கு காரணம் கூறுகிறாள். இந்த கோபம், இந்த ஆங்காரம், அந்த வார்த்தைகள் எதுக்குமே அர்த்தம் இல்லை இதெல்லாம் வெளி பூச்சிகள் ஆத்மாவிலே ஒட்டாத தூசுகள் இதை புரிந்து கொண்டால் எதுவும் நம்மை பாதிக்காது நினைவு தெரிஞ்ச நாள் இருந்து கீதையை சொல்லிட்டு வரவள் நான், அதோட பலன் கொஞ்சமாக இருக்கணும் என்று கூறுவதில் இருந்து கீதை லலிதாவை எந்த அளவிற்கு பாதித்துள்ளது என்பதை அறிய முடிகின்றது.

மகனை இழந்த போது மட்டும் அவள் சிறிது சாதாரண பெண்கள் போல் நடந்து கொள்கிறாள். சபேசனின் அடியையும் ஏச்சையும் பேச்சையும் தாங்கிக் கொள்ள முடியாத ராஜு ஒருநாள் பள்ளிக்குப் போகிறேன் என்று குளத்தில் விழுந்து தான் சுவாமி இருப்பதாக நம்பும் வானுலகத்திற்கும் சென்று விடுகிறான். மகனின் சாவை கண்டு சபேசன் ஆடிப்போய் ஏதும் பேசாமல் தலையை தொங்கப் போட்டுக் கொண்டு அழுது கொண்டிருக்கிறான். மீனு வந்து கோபமாக கத்திய போது மடேர் மடேர்

என்று தலையில் அடித்து அழுகிறான். சபேசனை கொலைகாரன் என்று திட்டிய போது மீனுவை கன்னத்தில் அறைந்து அவளது உணர்வு நிலையை புலப்படுத்துகிறார் லலிதா.

ராஜுவை கணவன் நடித்த போது கலங்கிய லலிதா அவன் இறந்துவிட்ட நிலையில் நிதானமாக நடந்துக் கொள்கிறாள். அவளுக்கும் மீனுக்கும் நடக்கும் உரையாடல் மூலம் அவளின் மன உளவியலை காட்டுவதாக உள்ளது.

எந்த நிலையிலும் கணவன் தன்னை தரக்குறைவாக திட்டும் போதும், தன் மகன் இறப்புக்கு காரணமான போதம், கூட அவள் நிதான நிலையில் காணப்படுவதை

"நிலையின் கிரியா தடங்கியான் தோற்றம்

மலையினும் மாணப் பெரிது"

எனும் திருக்குறளை மே நினைவூட்டுகிறது (Srinivasan, 2007).

ராஜு இறந்த பிறகு அதன் பாதிப்பினால் சபேசன் லலிதாவிடம் சொல்லாமல் வீட்டை விட்டு போய்விடுகிறான். இச்சம்பாவத்தினால் லலிதாவிற்கு அவன் மேல் அன்பு அதிகமானது தவிர குறையவில்லை.

எந்த சூழ்நிலையிலும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகாமல் அன்புடனும் கருணையுடனும் எல்லோரிடமும் நடந்து கொள்ளும் பண்புடன் வாழ்வதைக் காண முடிகின்றது. லலிதாவை ஒரு குறியீடாகவே ஆசிரியர் படைத்திருக்க. அவள் ஒரு மாதிரி பெண் மாதிரி என்பது எப்போதும் கிடைப்பதில்லை எனவே இப்புதினம் காட்டும் பெண் பாத்திரங்களில் அவள் தலைமையிடம் பெறுகிறாள்.

## தத்துவம் பேசும் ருக்மணி

லலிதாவை அடுத்து புதினத்தில் வரும் ஒரு பெண் பாத்திரம் ருக்மணி ஆவாள். இவள் பாலு வாத்தியாரின் மனைவி பாலு வாத்தியார் ஒரு பிராமணனாக இருந்தும் ஒரு குழந்தைக்கு தகப்பனாக இருந்தும் குடி சீட்டாட்டம் பிற பெண்கள் தொடர்பு என்று தவறான வழியில் சென்று தன் குடும்பத்தை கவனிக்காமல் விட்டுவிடுகிறான். இதனால் பெரிதும் பாதிப்புக்குள்ளான ருக்மணி தன் மகன் கிருஷ்ணனை கூட பொருட்படுத்தாது பட்டணத்திற்கு போய் விடுகிறாள். அங்கு ஒரு செட்டியாரோடு வாழ்கிறாள். ஒரு பிரச்சனைக்கு முடிவு காண புறப்பட்டு பல பிரச்சினைகளில் மாட்டிக் கொண்டு முழிக்கிறாள். பாலு வாத்தியாரை விட்டு விலகினாலும் கிருஷ்ணன் மேல் கொண்ட அன்பு மாறாமல் இருக்கிறாள். அவள் லலிதாவிடனும் மீதனு உடனும் பேசும் பேச்சுக்கள் அவள் பாத்திரத்தை விளக்குவதாக உள்ளன. இப்புதினம் பண்பு விளக்கப் புதினமாகும். ஏனென்றால் புதினம் முழுவதும் பாத்திரங்களின் பண்பை விளக்குவதாகவே அமைந்துள்ளது.

வாழ்க்கையில் மிகவும் நொந்து போன பெண்ணாக வரும் ருக்மணி பேசும்போது தத்துவ கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றாள். லலிதாவுக்கும் ருக்குமணிக்கும் இடை வேடிக்கை யேயான உரையாடல் அதனை காட்டுகிறது.

"சுரனை கெட்டுப்போன உடம்பு நன்னாயிருக்கு பாரேன் மூணு வேளை சாப்பிட்டுண்டு, நல்ல புடவை உடுத்திண்டு கட்டிலிலே படுத்துண்டு"

ஒரு வேடிக்கை தெரியுமா லலிதா இந்த மனசுக்கு ஆகாரம் கிடைக்கிற வரைக்கும் வயிறு ஒன்று தான் பிரதானமாக தோன்றியது (Vaasanthi, 1981). அது கிடைச்சதுக்கு அப்புறம் இந்த உடம்பு எத்தனை அலம்பம்னு வெறுத்து போறது உனக்கு புரியுமோ என்னவோ? என்று ருக்மணி கூறும் போது புரியறது மாமி என்று லலிதா கூறுகிறாள். மேலும் புரியாது என்னை மாதிரி அனுபவிச்சவங்களுக்கு தான் புரியும் நான் அனுபவிச்ச கஷ்டங்கள் சத்தியமான கஷ்டங்கள். அதை தீர்க்க எனக்கு தெரிந்த வகையிலே வழி தேடினேன் என்று.

பசி தன் வாழ்க்கைக் போக்கை எவ்வாறெல்லாம் திசை மாற்றி அழைத்து சென்று விட்டது என்பதை,

“கொடுமை அதை அனுபவிச்சவங்களுக்கு தான் தெரியும். அவர் கொடுத்த காசு ஒரு வாரம் சாப்பாட்டுக்கு தான். அப்புறம் என்ன பண்ணுவேன் எனக்கு சில சமயம் தோன்றும் லலிதா அந்த சித்தேரி இருக்கு பாரு அங்கே பிறந்திருந்தால் எவ்வளவு நன்னா இருக்கும் எந்த வேலையை வேணும்னாலும் கூச்சம் இல்லாமல் செய்யலாம் வயிற்றை நிரப்பிக்கலாம் இங்கே அக்ரஹாரத்தில் ஒரு பள்ளிக்கூட வாத்தியாரோட பொண்டாட்டியா இருந்துட்டு நான் என்ன வேலைக்கு போக முடியும் டவுன்ல யார் வீட்டிலையாவது சமைக்க போகலாம் என்று எவ்வளவோ பார்த்தேன் வேலை கிடைக்கவில்லை என்ன செய்யட்டும்?” என்று கூறுகிறாள் (Vaasanthi, 1981). மேலும் இத பாரு நான் யாருகிட்டயும் போய் பிச்சை கேக்கலே, யாரையும் ஏமாத்தலே, இன்னொருத்தர் பணத்தை திருடல்லே. எனக்கு சொந்தமான இந்த உடம்பைத்தான் உபயோகிக்கிறேன் என்று எதார்த்தமாகப் பேசுகிறாள்.

பிள்ளைக்கு உடம்பு சரியில்லையேன்றதும் வெளியில் இந்த சரீரம் தானே ஓடி வந்திருக்கிறது

“இந்தப் பிள்ளை பாசத்தை தான் என்னாலே மறக்க முடியல அவனையும் என் கூட வச்சுக்கணும்னு எத்தனை பார்த்தேன்! இந்த நாசமா போற ஊர் ஜனங்கள் குழந்தையோட மனசை கெடுத்து பிரிச்சு அழைச்சுட்டு போயிட்டா லலிதா எம்மேல எத்தனை பாசமா இருப்பான் அவன் தெரியுமா?” என்று ருக்மணி தன்னை நியாயப்படுத்தி கூறுகிறாள். வறுமையும் அலைக்கழிப்பும் தன் வாழ்வை திசை மாறச் செய்து விட்டதை குறிப்பிடுகிறாள் (Vaasanthi, 1981).

லலிதாவிடம் இருந்து விடைபெறும் வேளையில் வெளிப்படும் ஒரு கருத்து பெண்ணியம் குரலாக ஒலிக்கிறது.

“நம்பளை எல்லாம் செக்கமாடுகளா இவா நெனச்சுண்டு இருக்கா செக்குமாடு திமிர ஆரம்பிச்சா அப்பத் தெரியும்” என்று கூறிவிட்டு அவள் சென்று விடுகிறாள் (Vaasanthi, 1981).

ருக்மணி பாத்திரம் ஒரு மரபை உடைக்கிற பாத்திரமாக உள்ளது. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்கிற மரபு கூற்றை பொய்யாக்கி விட்டு வீட்டை விட்டு, ஊரை, பெற்ற மகனை விட்டு, பட்டினத்திற்கு ஓடி வேலை தேடி கிடைக்காமல் செட்டியார் ஒருவரோடு வாழ்கிறாள். இறுதியில் செட்டியார் பிள்ளையை வயிற்றில் சுமக்கிறாள் இதற்கு பசியை காரணமாக சொல்கிறாள். பிராமண இனத்தின் சகிப்புத்தன்மையை அதாவது கசப்பே ஆனாலும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் அச்சமுகத்திற்கு இருக்கின்ற தன்மையையே இப்புதினம் காட்டுகிறது.

## வறுமையின் உச்சகட்டம் சரோஜா

சரோசி என்று அழைக்கப்படும் சரோஜா பாத்திரம் அந்தக் கிராமத்தினர்களில் பாதிக்கப்பட்ட ஒரு பெண் பாத்திரம் ஆகும். சங்கரலிங்க ஐயரின் மருமகள். இவள் அந்த கிராமத்தில் இருக்கின்றவரை பசி பட்டினியை தாங்கிக் கொண்டு கணவன் கொடுமைகளையும் தாங்கிக் கொள்கிறாள். ஆனால் நிலத்தை விற்றுவிட்டு நகரத்திற்கு போகிறோம் என்றவுடன் அவளுக்கு அத்தனை பிடிமானமும் அற்றுப்போகிறது. அவள் தற்கொலை முடிவுக்கு வருகிறாள். இறந்து. அவள் குழந்தைகள் அனாதையாகி விடுகின்றன.

குடி சீட்டாட்டம் என்றிருந்த கணவன் வேறு சாதி பெண்ணொருத்தியை வீட்டிற்குள்ளேயே கொண்டு வந்து வாழ்க்கை நடத்துகிறான். இந்த கொடுமையை கூட தாங்கிக் கொள்கிறாள். அடுத்த வேலை உணவு இல்லாமல் லலிதாவிடம் வந்து புலம்புகிறாள்.

நிலத்தை விற்றுவிட்டு மெட்ராஸ் போகும் நேரம் சரோஜா லலிதாவை பார்க்க வருகிறாள். லலிதாவுக்கும் சரோஜாவுக்கும் நடக்கும் உரையாடல் உச்சகட்ட கொடுமையை சொல்வதாக அமைகிறது. வா சரோஜா உள்ள வாயேன் என்று லலிதா அழைக்கிறாள். அந்த வார்த்தைக்காகவே காத்திருந்த மாதிரி சரோஜாவின் கண்களில் இருந்து நீர் பொல பொலவென்று உதிர்ந்தது. சரோசியம்மா அழுவாதீங்க ஆம்பளைங்க பண்ற தப்புக்கெல்லாம் நீங்க என்ன செய்வீங்க என்றால் லட்சுமி.

சரோஜா ஆகாசத்தை பார்த்தபடி சொன்னால். "புருஷன் எப்படி வேணா இருக்கலாம். தங்கள் குலத்தை பற்றியும் தர்மத்தை பற்றியும் நினைச்சு பார்க்காமல் ஜனங்கள் பரிகாசம் பண்ற அளவுக்கு நடந்துக்கறச்சே நீங்களும் நானும் இந்த குல பெருமையைக காப்பாற்ற முடியும் என்று நினைக்கிறேளா?" என்று கேட்டாள் (Vaasanthi, 1981). மேலும் இவா இப்படி நடந்துக்கறச்சே நானும் எங்கையாவது கிளம்பி போயிட்டா என்னன்னு தோணறது மாமி என்று அழுகிறாள். லலிதா சரி சாப்பிட்டு எத்தனை நாள் ஆனது என்று கேட்டுக் கொண்டே ஐந்து படி அரிசியை ஒரு கைப்பையில் போட்டு கொடுக்கிறாள். நான் வரேன் மாமி என்று கிளம்பிச் சென்றவள் அடுத்த நாள் தூக்கு மாட்டிக் கொண்டு இறந்து விடுகிறாள்.

## முடிவுரை

இப்புதினத்தில் பெண்கள் நிலை என்று பார்க்கும் போது உளவியல் ரீதியாக லதா ருக்மணி சரோஜா இவர்கள் மூவருமே பாதிக்கப்பட்ட பெண்கள். லலிதா பாத்திரம் ஒரு கற்பனை பாத்திரம். அவளைப் போல பெண்கள் எல்லோரும் இருந்து விட்டால் உலகமே நன்மையடையும் என்று வரிவரியாக சொல்லப்பட்டு வந்த கருத்தியலின் உருவம். பொறுமை அன்பு இவற்றின் வடிவம். எதிர்மறைச் சிந்தனை இல்லாத நேர்மறையாகவே சிந்திக்கிறாள். ஆனால் இச்சமூகம் அவளுக்குக் கடைசி வரை இன்பம் என்பதைக் கொடுக்கவே இல்லை. ருக்மணி பாத்திரம் கிராமத்தினால் பாதிக்கப்படும் ஒரு சாதாரண மனுஷி. கிராமத்தில் பிறந்து வளர்ந்து அதன் கொடுமையை பொறுக்க முடியாமல் பட்டணத்திற்கு ஓடிப் போகிறாள். வீட்டு வேலை செய்ய முடியாமல் ஒரு செட்டியாரின் வீட்டுக்காரி ஆகிறாள். சரோஜா பசி சூழலில் தான் ஓடிப் போகும் முடிவை எடுக்கிறாள். ஆனால் கடைசியில் அவள் தூக்கு மாட்டிக்கொண்டு தற்கொலை செய்து கொள்கிறாள். ஒரு பிராமண கிராமம் எப்படி உள்ளது என்றும் அங்குள்ள பெண்களின் நிலையை பேசும்போது லலிதா ஒரு உன்னதமான லட்சிய பாத்திரம் தனித்துவம் வாய்ந்தவள். நகரத்தில் பிறந்து கிராமத்தில் வாழ வந்து கிராமத்தின் கோர பிடிக்குள் சிக்கிக்கொள்கிறாள். ருக்மணி பாத்திரம் கிராமத்தில் பிறந்து வளர்ந்து அதன் கொடுமையை பொறுக்க முடியாமல் நகரத்திற்குச் சென்று வாழ்வதையும் ஆணிற்கு எதிராக பெண்ணிய குரல் எழுப்புவதையும் சுட்டிக்காட்டி உள்ளார். அதேபோல் கிராமத்தில் இருக்கும் சரோஜா ஆண்களை எதிர்த்துப் போராடும் நிலையில் முடிவெடுக்க முடியாமல் பட்டினி கொடுமையால் வேறு வழி இன்றி தன் குழந்தைகளை விட்டுவிட்டு தூக்கில் தொங்கி விடுகிறாள். சமுதாயத்தில் பெண்களின் நிலை மாற வேண்டும் எனில் பொருளாதாரப் பிரச்சினைகள் அடிப்படைத் தேவைகள், வறுமை நிலை, மக்களின் அறியாமை, ஆகியவற்றில் மாற்றம் ஏற்பட்டால்தான் தீர்வு காண முடியும். என்பதையும் தீர்வு காண வேண்டுமெனில் ஒருவர் மட்டும் முன்வந்து போராடினால் எந்த ஒரு முடிவும் கிடைக்காது என்றும் அனைவரும் சமுதாய அக்கறையோடு செயல்பட வேண்டும் என்பதையும் புதினமானது பதிவு செய்கிறது.

## References

Srinivasan, S. (2007) Thirukural, New Century Book House, Chennai, India.

Vaasanthi, (1981) Aagaasa Veedugal, Thiruvarasu Puthaga Nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License